

சென்னை, அண்ணா அறிவாலயத்தில், 30-07-2026 அன்று, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்த விவசாயிகள், திராவிட மாடல் ஆட்சிக்காலத்தில் பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் 3215 விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதில், விவசாயப் பெருங்குடி மக்களுக்கான ஆழ்குழாய் கிணறு அமைப்பதற்கு மின் கட்டணச் சலுகையாக ரூ.73 கோடி வழங்கியமைக்கு நன்றி தெரிவித்தனர். கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடன் இருந்தனர்.

### டி.ஆர்.பாலு, எம்.பி. பரிந்துரையின் பேரில் - நெற்குன்றம் பகுதியை சேர்ந்த

# எஸ்.ஏழுமலைக்கு ரூ.2 லட்சம் - பிரதமர் மருத்துவ நிதி உதவி!

## டி.ஆர்.பாலு எம்.பி.க்கு பிரதமர் அலுவலகம் பதில் கடிதம்!



புதுடெல்லி, ஆக.2-

திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்ற மக்களவைக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள், தனது திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பொதுமக்கள் பலரின் பல்வேறு மருத்துவ சிகிச்சைகளுக்காக, சில சிறப்பு சூழ்நிலைகளில் ஏழை மக்களுக்கு இதய அறுவை சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை போன்ற பல்வேறு சிகிச்சைகளுக்கு, பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் பகுதி நிதியுதவியில் இருந்து எஸ்.ஏழுமலை என்பவருக்கு "இரண்டு லட்சம் ரூபாய்" பெற்றுத் தந்துள்ளார். அதன் விபரம் பின்வருமாறு,

எண்.8, வி.ஓ.சி. தெரு, ஜானகிராமன் காலனி, நெற்குன்றம் 600 107 திருவள்ளுவர் மாவட்டத்தை சேர்ந்த, எஸ்.ஏழுமலை அவர்களுக்கு புற்றுநோய் சிகிச்சைகளுக்காக, பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து உதவிடுமாறு பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

டி.ஆர்.பாலு அவர்களின் பரிந்துரையினையும் வேண்டுகோளினையும் ஏற்ற பிரதமர் அவர்கள், பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து புற்றுநோய் சிகிச்சைக்காக எஸ்.ஏழுமலைக்கு இரண்டு லட்சம் ரூபாய் வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இது விஷயம் தொடர்பாக டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களுக்கு பிரதமர் அலுவலகம் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் பின் வருமாறு:-

பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து, மருத்துவ சிகிச்சைகளுக்காக வழங்கப்படும் உதவித் தொகையானது மேற்கண்ட பயனாளர்கள் சிகிச்சை பெறும் பிரதமர் தேசிய நிவாரண நிதியின்கீழ் பட்டியலிடப்பட்ட மருத்துவமனையான கிறிஸ்டியன் மெடிக்கல் காலேஜ் வேலூர் மருத்துவமனைக்கு வழங்கப்படும் என்றும், சிகிச்சை முடிவடைந்த பின்னர், உரிய ஆவணங்களின் நகலைப் பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், ஆவணங்கள் கிடைத்த பின்னர், உதவித் தொகையானது உடனடியாக மேற்கண்ட மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், பிரதமர் அலுவலகக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தேவைப்படுவதாக கடிதம் எழுதினால்

# கல்வி நிறுவனங்கள் - நூலகங்களுக்கு புத்தகங்கள் வழங்கத் தயார்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



சென்னை, ஆக.2-

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், புத்தகங்கள் தேவைப்படும் கல்வி நிறுவனங்கள், நூலகங்கள் மற்றும் படிப்பகத்தினர் கடிதம் எழுதினால், அவர்களுக்கு நூல்களை வழங்கத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்குறிப்பிட்டுள்ளதாவது:-

**கற்றனைத்து ஊறும் அறிவு**

2018 இல் தி.மு.க. தலைவராகப் பொறுப்பேற்றதில் இருந்து, என்னைச் சந்திக்க வருபவர்கள் பூங்கொத்து, சால்வைகளுக்குப் பதிலாகப் புத்தகங்களையே அன்பளிப்பாக வழங்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

இதுவரை இப்படி பெறப்பட்ட 6 இலட்சம் நூல்களைத் தமிழ்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள நூலகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம்.

இதன் தொடர்ச்சியாக, பாளையங்கோட்டை சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்காகவும், தாம்பரத்தில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள நூலகத்துக்காகவும் மேலும் 5 ஆயிரம் புத்தகங்களை இன்று வழங்கினேன்.

புத்தகங்கள் தேவைப்படும் கல்வி நிறுவனங்கள், நூலகத்தினர், படிப்பகத்தினர் கடிதம் எழுதினால் அவர்களுக்கும் புத்தகங்களை வழங்கத் தயாராக இருக்கிறோம்.

வாசிப்பு பெருகினால்தான் தமிழ்நாடு தன் அடையாளத்தை இழக்காமல் பாதுகாக்கப்படும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### விளம்பர மயக்கத்தில்

# தமிழ்நாட்டை வைத்திருக்க நினைக்கிறதா த.வெ.க. அரசு?

## காவிரிப் பிரச்சினையில் உடனே நடவடிக்கை எடுக்க கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!



சென்னை, ஆக.2-

நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள், நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், விளம்பர மயக்கத்தில் தமிழ்நாட்டை வைத்திருக்க நினைக்கிறதா த.வெ.க. அரசு என்றும், காவிரி பிரச்சினையில் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து கனிமொழி கருணாநிதி அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

எல்லாவற்றிலும் திசைத்திருப்பும் அரசியலைச் செய்துவரும் தவெக அரசு, காவிரி பிரச்சனையைத் திசைத்திருப்ப அடுத்ததாக காவிரி ஆற்றங்கரையில் கூட "ஆய்வு" நடத்தலாம்.

மாநில உரிமைகளை அடகு வைத்து, விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்கிவிட்டு, விளம்பர மயக்கத்தில் தமிழ்நாட்டை வைத்திருக்கலாம் என்று நினைக்கிறதா த.வெ.க. அரசு?

டெல்டாவில் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டதோடு, தற்போது பாதி தமிழ்நாட்டிற்கு குடிநீர்ப் பிரச்சினை வருமளவுக்கு காவிரி விவகாரம் சென்றுவிட்டது. த.வெ.க. அரசு இனியும் இப்பிரச்சனையில் மௌனம் காக்காமல், உடனடியாக நடவடிக்கை வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

### காவிரிநீர் - மேகதாது சார்ந்த எந்த விவாதமும் செய்யாமல்

# எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்குவதிலேயே காலத்தைக் கடத்திவிட்டீர்களே CM SIR!

## வலைதளப்பதிவில் - சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு. அப்பாவு கண்டனம்!



நெல்லை.ஆக.2-

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு. அப்பாவு விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:

தலைவர் கலைஞர் அவர்களும், தமிழக அரசியல் தலைவர்களும் 28 ஆண்டுகள் போராடி காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை பெற்றுத் தந்தனர். குறித்த காலத்தில் காவிரி நீர் பெற அனைத்து கட்சி கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களும் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உட்பட அனைத்து அரசியல் கட்சி தலைவர்களும் முதல்வரிடம் கோரிக்கை வைத்தும், அதனை மதிக்காமல் ஆணவத்தின் உச்சத்திற்கே சென்று விட்டீர்களே CMsir?

இரண்டு மாதத்திற்கு முன்னரே உச்சநீதிமன்றம் சென்று காவிரி நீர் பெறுவதற்கு பதிலாக தான்தோன்றித் தனமாக நானே கர்நாடக முதல்வரை சந்தித்து தண்ணீரைக் கொண்டு வருவேன் என்ற அகந்தையால், நீங்கள் அவமானப்பட்டதோடு தமிழகத்தையும் அவமானப்படுத்தி விட்டீர்களே CMsir?

காவிரிப் படுகையில் உங்கள் நண்பன் ஜனார்த்தன ரெட்டிக்கு மணல் எடுப்பதற்காக காவிரி படுகையையே காய வைத்து விட்டீர்களா CMsir?

நீர்வளத்துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளிடம் காவிரி நீர் மற்றும் மேகதாது சார்ந்த ஆக்கப்பூர்வமான எந்த விவாதமும் செய்யாமல், ஆட்சியை தக்க வைக்க எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்குவதிலேயே காலத்தை கடத்தி விட்டீர்களே CMsir?

தமிழக, கர்நாடகா முதல்வர்களின் காலம் தாழ்ந்த சந்திப்பு நடத்தியிருந்தாலும், காவிரி நீர் பெறுவதற்கான சந்திப்பாக அல்லாமல், தனது நண்பரும், டெல்லி தமிழக அரசு பிரதிநிதியும், ஜனநாயக பட தயாரிப்பாளரும், கர்நாடக முதல்வரின் நெருங்கிய நண்பருமான பெங்களூர் வெங்கட் நாராயணாவின் தொழில் சார்ந்த சந்திப்பாகத்தான் இருந்திருக்கும் என்று சந்தி சிரிக்கிறது CMsir?

இவ்வாறு முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.

# 6 படுகொலைகள்! வேடிக்கை பார்க்கும் த.வெ.க. அரசு!

சென்னை,ஆக.2-

தி.மு.க. ஐ.டி.விங்கின் வலை தளப்பதிவு வருமாறு:-

தன் திரைப்படம் ஓடும் திரையரங்குகளுக்கு பாதுகாப்பு கொடுப்பதில் காட்டும் அக்கறையை, மக்களைப் பாதுகாப்பதில் இந்தக் கையாலாகாத அரசு காட்டவில்லை!

3 மாத த.வெ.க. ஆட்சியிலேயே, சட்டம் ஒழுங்கு ஒட்டுமொத்தமாகச் சந்தி சிரித்து விட்டது.

காவல்துறையைக் கையில் வைத்திருக்கும் முதல்வர் விஜய் எவ்வளவு பெரிய நிர்வாகத் திறமையற்ற கோழை என்பது அப்பட்டமாகத் தெரிகிறது.

Tamil Nadu has become the Murder Capital!

Step down if you don't know how to run a state! Tamil Nadu's mothers and elders are bleeding while this narcissist plays blame and vengeance politics!

இவ்வாறு தி.மு.க. ஐ.டி. விங் தெரிவித்துள்ளது,




திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, தண்டராம்பட்டு கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ.வேலு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், மாவட்ட துணைச் செயலாளர் மு.பெ.கிரி, ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், து.சக்கரவர்த்தி, மெய்யூர் சந்திரன் உட்பட பலர் உள்ளனர்.

### இணைய தளங்களில் தவறாக வழிநடத்தும்

# மருத்துவ சிகிச்சை விளம்பரங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 2-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள், நேற்று முன்தினம் மக்களவையில், மருந்துகள் மற்றும் மாயச் சிகிச்சைகள் (ஆட்சேபனைக்குரிய விளம்பரங்கள் சட்டம், 1954ன் விதிகளைப் பெரிய தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் இணையவழி இடைநிலைச் சேவை வழங்குநர்கள் முறையாகப் பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள், இணையத் தளங்களில் தவறாக வழிநடத்தும் மருத்துவ மற்றும் சிகிச்சை தொடர்பான விளம்பரங்களைத் தடுப்பதற்கான முயற்சிகள், இணையச் சூழலில் இச்சட்டத்தை அமல்படுத்தும் ஏற்பாடுகள், இணைய சேவை வழங்குநர்கள் மற்றும் விளம்பரதாரர்களின் பொறுப்புணர்வை வலுப்படுத்த பொதுமக்களை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தவறான மருத்துவக் கோரிக்கைகளிலிருந்து பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை இணை அமைச்சர் திருமதி அனுப்ரியா பட்டேல் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:

மருந்துகள் தொடர்பான விளம்பரங்கள் மருந்துகள் மற்றும் மாயச் சிகிச்சைகள் (ஆட்சேபனைக்குரிய விளம்பரங்கள்) சட்டம், 1954ன் கீழ் ஒழுங்குபடுத்தப்படுகின்றன என்றும், இச்சட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு மாநில அரசுகளிடம் உள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார். மேலும், மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் விதிமுறைகள், 1945ல் 2015 ஆம் ஆண்டு செய்யப்பட்ட திருத்தத்தின்படி, அட்டவணை H, அட்டவணை H1 மற்றும் அட்டவணை Xஇல் இடம்பெறும் மருத்துவரின் பரிந்துரையுடன் மட்டுமே வழங்கப்படும் மருந்துகள் தொடர்பான விளம்பரங்களை, ஒன்றிய அரசின் முன் அனுமதி பெறாமல் வெளியிடக் கூடாது என்ற விதி கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இவ்விதிமுறைகளை மீறும் சம்பவங்களில் நடவடிக்கை எடுக்க மாநில மருந்து உரிமம் வழங்கப்பட்டுள்ளதாக வழங்கும் அதிகாரிகளுக்கு அதிகாரம் அமைச்சர் அமைச்சர் தெரிவித்தார். மேலும், தவறாக வழிநடத்தும் விளம்பரங்கள் தொடர்பான புகார்கள் மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பிற்கு கிடைக்கும் போதெல்லாம், அவை உரிய நடவடிக்கை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட மாநில மருந்து உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் கூறினார்.

**பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது!**

இணையம் மற்றும் தொலைக்காட்சி வழியாக ஒளிபரப்பப்படும் விளம்பரங்கள் தொடர்பாக நடைமுறையில் உள்ள ஒழுங்குமுறை அமைப்பின்படி, தனியார் செயற்கைக்கோள் தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பப்படும் அனைத்து விளம்பரங்களும் கேபிள் தொலைக்காட்சி வலையமைப்புகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1995 மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிமுறைகளில் இடம்பெற்றுள்ள விளம்பர நெறிமுறைகளை கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார். மேலும், விளம்பர நெறிமுறைகளின் விதி 7(5)ன் படி, ஒரு பொருளுக்கோ அல்லது அதன் உட்பொருட்களுக்கோ அறிவியல் ரீதியாக நிரூபிக்க முடியாத விசேஷ, அற்புத அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட குணங்கள் இருப்பதாக பொதுமக்கள் கருதும் வகையிலான விளம்பரங்கள் வெளியிடப்படக் கூடாது என்றும் கூறினார். இவ்விதிகளை மீறும் தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், விளம்பர நெறிமுறைகளை முறையாகப் பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக ஒன்றிய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகம் அவ்வப்போது ஒளிபரப்பாளர்களுக்கு அறிவுரைகளையும் வெளியிட்டு வருவதாகவும் அமைச்சர் தெரி வித்தார்.

மேலும், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019ன் 10ஆவது பிரிவின் கீழ் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், நுகர்வோரின் உரிமைகள் மீறப்படுதல், நியாயமற்ற வணிக நடைமுறைகள் மற்றும் தவறான அல்லது தவறாக வழிநடத்தும் விளம்பரங்கள் தொடர்பான விவகாரங்களை ஒழுங்குபடுத்துவதுடன், நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாத்து அமல்படுத்தும் பொறுப்பும் அந்தஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**அரசு நடவடிக்கை எடுத்துள்ளது!**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 201960T 18ஆவது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம், தவறாக வழிநடத்தும் விளம்பரங்களைத் தடுப்பதற்கான மற்றும் அவ்வகை விளம்பரங்களுக்கு அளிக்கப்படும் பரிந்துரைகள் தொடர்பான வழிகாட்டுதல்கள், வெளியிட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த வழி காட்டுதல்களில், தவறாக வழிநடத்தாத மற்றும் செல்லத்தக்க விளம்பரங்க ளுக்கான நிபந்தனைகள், கவர்ச்சிகரமான சலுகை விளம்பர ங் கள், மாற்று விளம்ப ரங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை, குழந்தைகளை இலக்காகக் கொண்ட விளம்பரங் கள், விளம்பரங்களில் இடம்பெற வேண்டிய மறுப்புரை மற்றும் உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் விளம்பர முகமைகள் பின்பற்ற வேண்டிய பொறுப்புகள் குறித்து விரிவாக வகுத்து வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இவ்வாறு, மருந்துகள் மற்றும் மாயச் சிகிச்சைகள் (ஆட்சேபனைக்குரிய விளம்பரங்கள்) சட்டம், 1954, மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் விதிமுறைகள், 1945, கேபிள் தொலைக்காட்சி வலையமைப்புகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1995 மற்றும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019 ஆகியவற்றின் வாயிலாக தவறான மற்றும் ஆதாரமற்ற மருத்துவ விளம்பரங்களைத் தடுக்கவும், நுகர்வோரின் நலன்களைப் பாதுகாக்கவும் ஒன்றிய அரசு பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக, ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை இணை அமைச்சர் திருமதி அனுப்ரியா பட்டேல் அவர்கள், தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.